பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 24 (7—3—68) வியாழன் ★ வெளியூர்: மாசி 25 (8—3—68) வெள்ளி [இதழ்: 221

## 2,69,274 டன் அரிசி கொள்முதல்

"கடந்த ஒன்றரை மாதங்களில் (மார்ச் 4-ந் தேதி முடிய) தமிழ்நாட்டில் 2 69 274 டன் அரிசி கொள்முதலாகியுள்ளது; இதில் 1,48,758 டன் தஞ்சை மாவட்டத்தில் கொள்முதலாகியுள்ளது"

என்று மேல் சபையில் கேள்வி நேரத்தில் அறிவித்த உணவு அமைச்சர் மதியழகன், 'குறுவைக்கு 5 இலட்சம் டன் கொள்முதல் இலக்கு' என்றும் குறிப்பிட்டார்.

# கலைப் பாடங்களுடன் அறிவியல் பாடங்களும் தமிழில்

## பாட நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடு

## இட நெருக்கடியைத் தவிர்க்கக் கல்லூரிகளில் மாற்று முறைத் திட்டம்

### தமிழக அரசின் கல்வி வளர்ச்சித் திட்டங்கள்— அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 7—

"தமிழக அரசின் கல்வித் துறைக்கு 1968 69-ம் ஆண்டுக்கான மானியமாக ரூ. 56,92,90,200 ஒதுக்க வேண்டும்"

என்ற கோரிக்கையை இன்று சட்டமன்றத்தில் வைத்து கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அந்த குறிப்புரையில் குறிப்பிட்டதாவது:—

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுவருகிறது; தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கான திட்ட முதற் குறிப்பு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது; மிக்க அவசியமெனக் கருதப்படுகிற பல பணிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன; இந்த ஆண்டு இறுதிக்குள், இந்திய அரசுடன் கலந்து பேசி இத்திட்டம் முடிவு செய்யப்படும். கல்வித் திட்டங்களின் பெருகி வரும் தேவைகளுக்கிணங்க, ஏற்கனவேயுள்ள கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தை சிறப்பாக மேம்படுத்துவதற்கான திட்டங்களின் தேவைகளையும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பல வயதுத் தொகுதிகளிலுள்ள மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்குத் தேவைப் ஆசிரியர்களை நியமிப்பதற்கான திட்டங்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாட்டிற்குப் போதிய நிதி வசதி அளிக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### பொதுக் கல்வி

பொதுக் கல்விக்காக, 1967—68-ம் ஆண்டில் ரூ. 5,215 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, 1968—69 வரவு-செலவுத் திட்டத்தில், திட்டச் செலவு-திட்டத்தின்கீழ் வராத செலவு ஆகிய இரண்டிற்கும் சேர்த்து மொத்தம் ரூ. 5,445 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

### துவக்கப் பள்ளிகளில் இடவசதி

6-முதல் 11-வயதுத் தொகுதியிலுள்ளவர்கள் இப்போது பெருமளவில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருப்பதனால், 11-முதல் 14 வயதுத் தொகுதியிலுள்ளவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்க்கவேண்டி வந்தது.

இந்த வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மூன்றாவது திட்ட இறுதியில் 10.48-இலட்சமாக இருந்தது; 1967—68-ம் ஆண்டு இறுதியில் (1—8—67 தேதிய நிலவரப்படி) இந்த எண்ணிக்கை 12.33 இலட்சமாக உயர்ந்தது.

பள்ளிகளில் சேர்க்கப்பட்டவர்கள் 52 சதவீதத்தினர் ஆவர். 1967—68-ல் மேற்கொண்டும் 1.50-இலட்சம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டது.

1968—69-ல், இந்த வயதுத் தொகுதியினரில் மேற்கொண்டும் 1.50-இலட்சம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

### ஆங்கிலக் கல்வி போதனை வசதி

3-வது வகுப்பு முதல் 5-வது வகுப்புவரை கற்பிக்கப்படும் ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்துவதற்காக, உயர் தொடக்க ஆசிரியர் பதவிகளில் ஏற்கனவே பணியாற்றி வருகிற செகண்டரி கிரேடு ஆசிரியர்களை அமர்த்திக் கொள்வதற்காக 5,000 செகண்டரி கிரேடு பதவிகள் ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1968—69-ல் 3-வது வகுப்பு முதல் 5-வது வகுப்புவரை 3,000 செகண்டரி கிரேடு பதவிகள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

### விஞ்ஞானக் கல்வி

பள்ளிக் கல்வியின் தொடக்கத்திலிருந்தே விஞ்ஞானக் கல்விக்கு ஊக்கம் அளிப்பதற்காக ஆரம்பப் பள்ளிக்கு ரூ. 800 வீதமும், உயர் ஆரம்பப் பள்ளிக்கு ரூ. 1,000 வீதமும் முழு மானிய அடிப்படையில் விஞ்ஞானக் கருவிகள் வாங்கி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

1967—68-ல் 2,000 ஆரம்பப் பள்ளிகளிலும், 400 உயர் ஆரம்பப் பள்ளிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1968—69-ல், 800 ஆரம்பப் பள்ளிகளிலும் 250 உயர் ஆரம்பப் பள்ளிகளிலும் இத்திட்டத்தை நிறைவேற்றக் கருதியுள்ளது.

### நண்பகல் உணவு

"தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும், கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அரிசன நலத்துறை, சென்னை மாநகராட்சி முதலியவற்றின் நிர்வாகத்திலுள்ள பள்ளிகள் உட்பட 30,500 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் ஏறக்குறைய 18.27 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1968—69 வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கென ரூ. 192 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1966—67-ம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் கூடுதல் மாணவர்களைப் பொறுத்தவரையில், இம்மாநிலத் திட்ட வரம்புக்குள் இத்திட்டத்துக்கு மத்திய உதவி கிட்டும்.

இலவச நண்பகல் உணவு வழங்கும் திட்டம் சுமார் 343 இடைநிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. இதற்காகும் செலவு முழுவதும் பொதுமக்கள் தாமாக உவந்தளிக்கும் நன்கொடையிலிருந்து சரிக்கட்டப்படுகிறது.

இத்திட்டத்தினால், 12,616 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

### பாட நூல் வெளியீடு

ஆரம்ப, உயர் ஆரம்பப் பள்ளிகளுக்குரிய பாட நூல்களை அரசாங்கமே தயாரித்து வெளியிடும் திட்டம் செயல்பட்டுவருகிறது.

1967—68-வரை 4 முதல் 7 வகுப்புக்களுக்குரிய தமிழ்ப் பாட நூல்களையும் அரசாங்கமே தயாரித்து வெளியிட்டுள்ளது.

1968—69-ல், 8-வது வகுப்புக்குரிய தமிழ்ப் பாட நூலினை இத்திட்டத்தின்கீழ் அரசாங்கமே தயாரித்து வெளியிடும்.

### குறிக்கோள்

**14 முதல் 17 வயதுத் தொகுதியில் உள்ளவர்களில் 80 ஆயிரம் பேர்களை 1968—69-ல் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பதே நமது குறிக்கோள் அளவாகும்.**

**60 ஆயிரம் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதும், சிறப்பு ஆசிரியர்கள் உட்பட 2,200 ஆசிரியர்களை நியமிப்பதும் 1968—69-ல் நமது குறிக்கோள் அளவாகும்.**

### பயிற்று மொழி

மூன்று மொழி பயிலும் அடிப்படையில் இம்மாநிலத்தில் பள்ளிகளிலே மொழிகள் பயிலும் அமைப்பு இதுவரை கீழ்க்கண்டவாறு இருந்தது:—

பகுதி I: வட்டார மொழி அல்லது தாய் மொழி (தாய்மொழி வட்டார மொழியினின்று வேறுபட்டதாக இருப்பின்).

பகுதி II: சிறப்புத் தமிழ் அல்லது இந்தி அல்லது 1-வது பகுதியில் எடுத்துக் கொள்ளாத வேறோர் இந்திய மொழி.

பகுதி III: ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத மற்றொரு மொழி.

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவை 23—1—68-ந் தேதியன்று நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, அரசாங்கம் இப்போது உடனடியாகக் கீழ்க்கண்ட இரு மொழிக் கொள்கையைச் செயலுக்குக் கொண்டுவந்துள்ளது:—

பகுதி அ:— வட்டார மொழி அல்லது தாய் மொழி (தாய் மொழி வட்டார மொழியினின்று வேறுபட்டதாக இருப்பின்).

பகுதி இ:—ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத மற்றொரு மொழி.

'அ' பகுதியில் குறிப்பிட்டுள்ள மொழி 1-ம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படும். 'இ' பகுதியில் குறிப்பிட்டுள்ள மொழி 3-ம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படும். இரு மொழிகளிலும் கட்டாயமாகத் தேர்வு எழுதும் முறை தொடர்ந்திருக்கும். இப்போதுள்ள இந்தி ஆசிரியர்களை அவர்களுடைய தகுதிக்கேற்றவாறு தக்கஇடங்களில் அமர்த்த எல்லா முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது.

### பாடத் திட்டங்களைத் திருத்தியமைத்தல்

திருத்தியமைத்த பாடத் திட்டம் 1 முதல் 10 வகுப்புகளிலே செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இது 1968—69-ம் ஆண்டில் 11-வது வகுப்பிலும் செயலுக்குக் கொண்டு வரப்படும். நடப்பு ஆண்டில் 10-வது வகுப்பில் தேர்வுப் பாடங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

### மாவட்டக் கழகப் பள்ளிகள்

முன்பிருந்த மாவட்டக் கழகங்களின் உயர்நிலைப் பள்ளிகள், மாவட்டச் சிறப்புக் கல்வி அதிகாரிகளின் கீழ்ச் செயலாற்றும் முந்தைய ஏற்பாடு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநர் பதவி ஒன்றுக்கும், துணைப் பணியாளர்களை நியமிப்பதற்கும், அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

முன்னாள் மாவட்டக் கழகப் பணியாளர்களை 1—4—1968 முதல் அரசாங்கப் பணியில் இணைக்கும் வேலையையும், மாவட்ட நிலையில் நிர்வாகத்தினைச் சீரமைக்கும் பணியையும், இந்த அதிகாரியும் துணைப் பணியாளர்களும் கவனிப்பர்.

### 1968-69-க்கான வேலைத் திட்டம்

பல்கலைக் கழகங்கள் அனுமதி வழங்குவதைப் பொறுத்து, பொது மக்களின் ஆதரவு போதுமானதாக உள்ள இடங்களில் ஆறு அரசாங்கக் கல்லூரிகளை 1968—69-ம் ஆண்டில் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது கல்லூரிப் புதுமுக வகுப்பு மட்டுமே உள்ள அரசாங்கக் கல்லூரிகளில் அதாவது திருவண்ணாமலையிலும், திண்டுக்கல்லிலும், செய்யாற்றிலும் உள்ள கலைக்கல்லூரிகளில் பல்கலைக் கழகம் அனுமதி வழங்கினால், 1968—69-ல் பட்டப் படிப்பு வகுப்புகள் வகுப்புகள் தொடங்குவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

கோயம்புத்தூர் அரசாங்கக் கலைக் கல்லூரியில் கணிதத்தில், எம்.எஸ் சி. பட்ட மேற்படிப்புப் பாட முறையையும், சேலம் அரசாங்கக் கலைக் கல்லூரியில் பொருளாதாரவியலில் எம்.ஏ. பட்ட மேற்படிப்புப் பாட முறையையும் தொடங்க இணைப்பு வழங்குமாறு பல்கலைக் கழகம் வேண்டப்பட்டுள்ளது. பெரிய நகர்ப் பகுதிகளில் புகுமுக வகுப்புகளுக்கெனவுள்ள இடங்களைவிட அவ்வகுப்பில் சேர மனுச் செய்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவுள்ளதென்பது அனுபவ வாயிலாக நாம் கண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## அண்ணாவுக்கு இலங்கை அழைப்பு

### கண்ணகி விழாவில் பங்கேற்க ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 6—

இலங்கையின் கிழக்கு மாநிலத்திலுள்ள பட்டிக்கோலவா என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க கண்ணகி விழாவுக்குத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை அழைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் பத்தினித் தெய்வமாகக் கண்ணகியைப் போற்றி வருகின்றனர்.

கிழக்கு மாநிலத்தில் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு முக்கியக் காரணமும் உண்டு. அங்கே பத்தினித் தெய்வத்துக்குப் பல கோயில்கள் இருக்கின்றன.

இவ்வாண்டு நடைபெறும் கண்ணகி விழாவை, பெரியதொரு தமிழ் விழாவாகவே கொண்டாடுவதற்குரிய வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. இராசதுரை விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

திரு. இராசதுரை, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தலைமையமைச்சர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்து அறிஞர் அண்ணா அவர்களையும் இவ்விழாவுக்கு அழைப்பதற்கு ஆவனசெய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மாசி 24 (7—3—68) வியாழன்

# வெற்றிப் பாதையில் ஓராண்டு!

தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பைத் தி. மு. கழகம் ஏற்று நேற்றோடு ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது; இன்று இரண்டாவது ஆண்டு துவங்கியுள்ளது.

இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாகக் காங்கிரசுக் கட்சி அல்லாத அரசியல் கட்சிகள் பலவற்றின் கூட்டுடன் அமைக்கப் பட்ட பல மாநில அரசுகள் கவிழ்க்கப்பட்டுவிட்டுள்ளன; ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சிகளுக்குள்ளாகத் தலைதூக்கிய கருத்து முரண்பாடுகளை மட்டுமே இதற்குக் காரணங்களாகக் கொள்ளுவதற்கில்லை; 'காங்கிரசுக் கட்சியும் இந்திய அரசும் திரைமறைவில் செய்த அரசியல் சதியே பெரிதும் காரணமாகும்' என்பதை, வரலாற்று ஆசிரியர்கள் பின்னர் இடித்துரைக்கத்தான் போகின்றனர்!

ஆனால், தமிழகக் கழக அரசைக் கவிழ்த்துவிடக்கூடிய ஆசை காங்கிரசுக் கட்சிக்கு இருந்திட்டாலும், அவ்வாசைக்குப் பலியாகி விடக்கூடிய வகையில் எண்ணிக்கைப் பலம் குறைந்ததாகக் கழக ஆட்சி இருந்திடவில்லை; தேவைக்கு அதிகமாகவே எண்ணிக்கைப் பலம் கொண்டதாகக் கழக ஆட்சி அமைந்திருக்கிறது.

'தமிழகக் கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும்' என்ற ஆசை தனக்கு இருந்துவருகிறது என்பதை, காங்கிரசுக் கட்சி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாது; 'அத்தகு ஆசை தனக்கு இருப்பதாக ஒப்புக்கொள்ளும்' என, காங்கிரசுக் கட்சியிடம் எதிர்பார்க்கவும் முடியாது—கூடாது.

இத்தொடர்பில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையில் குறிப்பிட்டிருப்பது, காங்கிரசுக் கட்சியின் உள்ளக்கிடக்கையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது; அது, இது:—

**"'இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் சதி செய்தோமா' என்று பேசினார்கள்; நாங்கள் 138 பேர்களாக இல்லாமல் ஐந்தாறு பேர் வித்தியாசத்தில் தோற்பவாகளாக இருந்திருந்தால், 'என்னென்ன செய திருப்பார்கள்' எனபதை யூகித்துக்கொள்ள முடியும்; 'எனனென்ன நடைபெற்றிருக்கிறது' என்பதும் தெரியும்."**

கழக ஆட்சியைக் கவிழ்த்திடும் ஆசை, 'காங்கிரசுக் கட்சிக்கு இருக்கிறதா இல்லையா' என்பதை அறிந்துகொள்ள, எப்பொழுதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுள்ள தனி நபர்களின் வன்முறைச் செயல்களை மிகைபடுத்தியும் பெரிதுபடுத்தியும் காட்டி, 'கழக ஆட்சியில் சட்டம்-அமைதி சீர்குலைந்து விட்டது' எனக் காங்கிரசுக் கட்சி ஒப்பாரி வைத்துக்கொண்டிருப்பதும், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி, 'அடிப்படை உரிமை நாள்' எனக் கூட்டங்கள் நடத்தியிருப்பதும் போதிய சான்றாகும்.

கடந்த ஓராண்டுக்கால ஆட்சியில் கழகம் புரிந்துள்ள சாதனைகள் பற்பல;—உணவுத் துறையில் உற்பத்தியைப் பெருக்கி இருப்பதும், செம்மையாகக் கொள்முதல் செய்திருப்பதும், சீராக உணவுத் தானியங்களை வழங்கி இருப்பதும், குறிப்பாக அரிசியின் விலையை ஏறவிடாமல் குறைந்த விலையிலேயே கட்டுப்படுத்தி இருப்பதும் பாராட்டுதற்குரிய சாதனையாகும்.

இந்த இனத்தில், ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற ஏற்பாட்டின் தனிச் சிறப்பு, மக்களின் பாராட்டுதலைப் பெற்ற ஒன்றாகும்.

அரசாங்கப் போக்குவரத்துத்துறை, இக்குறுகிய ஓராண்டுக் காலத்துக்குள்ளாக செய்திருக்கின்ற பணி, வேறு மாநிலம் எதிலும் நடைபெற்றில்லாத அற்புதமாகும். தனியார் துறையிடம் இருந்துவந்த பேருந்துத் தடங்கள் பலவற்றை விரைந்து அரசுடைமையாக்கியிருக்கிறது கழக ஆட்சி.

'பேருந்துப் போக்குவரத்தை அரசுடைமையாக்க வேண்டும்' என்ற குறிக்கோள் தனக்கும் உடன்பாடுதான் எனக் காங்கிரசுக் கட்சி பறைசாற்றி வந்திருந்தபோதிலும், தான் பறைசாற்றிவந்திருப்பதற்கொப்ப, அத்துறையை அரசுடைமையாக்குவதில் தயக்கம் காட்டிக் காலங்கழித்தே வந்திருக்கிறது. ஆனால் கழக அரசோ, தக்கதோர் திட்டத்தைத் தீட்டி, இந்த ஓராண்டுக் காலத்துக்குள்ளாகப் பல வழித் தடங்களை அரசுடைமை ஆக்கியதுடன், விரைவுப் பேருந்து வண்டிகளின் எண்ணிக்கையையும், தடங்களையும் பெருக்கி உள்ளது. நிர்வாகமும், முன்பிருந்ததைவிடச் சீராக்கப்பட்டுள்ளது.

காவிரி குடிநீர்த் திட்டம், கூவம் துப்புரவு ஏற்பாடு போன்ற -மக்களுக்கு வாழ்வளிக்கும் பணிகளைக் கழக ஆட்சி மேற்கொண்டிருக்கிறது.

தனியார் துறை மின் வழங்கு நிறுவனங்களை அரசுடைமையாக்கிக்கொள்ளுவதிலும் கழக ஆட்சி புரிந்திருக்கின்ற சாதனை, அலட்சியப்படுத்தக்கூடியதல்ல!

சீரணி அமைப்பும், அது புரிந்திருக்கின்ற பணிகளும் கழக ஆட்சிக்கு தனிச் சிறப்பு அளிப்பதாகும்.

தமிழக அரசுப் பொறுப்பைத் தி. மு. கழகம் ஏற்றுக்கொண்ட முதலாண்டு நிறைவு பற்றி நாம் மகிழ்கின்ற இந்த வேளையில், தமக்கு மகிழ்ச்சியூட்டிய மூன்று நிகழ்ச்சிகளைக் குறித்து முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சட்டப் பேரவையில் அறிவித்திருக்கின்றார்கள்; அம்மூன்றும், கழக ஆட்சி நிறைவேற்றி இருக்கின்ற சாதனைகளே ஆகும்.

முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டிய அம்மூன்று நிகழ்ச்சிகளும், தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்சசியூட்டும் நிகழ்ச்சிகளேயாகும்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்துள்ளதை, அப்படியே இங்கு தருகின்றோம்:—

"'இனி இந்தி இல்லை—மும்மொழித் திட்டம் இல்லை' என்ற தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நான் படித்தபோது, என்னுடைய உள்ளத்தில் பழைய நினைவுகளெல்லாம் பொங்கிக் கொந்தளித்தன! அனறைப் பிள்ளைகளாக நாங்கள் இந்தியை எதிர்த்து அலைந்த காட்சிகள், என் நினைவுக்கு வந்தன! எங்களால் மட்டுமே அந்த மகிழ்ச்சியை உணர முடியும்!

"தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுக்காலமாக இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட தியாகமெல்லாம் ஒரு வடிவமெடுத்து வெற்றியைத் தேடித் தந்த நிலை இது! அந்த நாள்தான், எங்கள் இன்பக் கனவுகள் நனவான நாள்!

"என்னுடைய வாழ்க்கையில்—ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்—நான், மூன்று முறை மகிழ்ச்சியடைந்தேன்—

முதன் முதலில்—இந்த நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டி—அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி—கட்சிப் பாகுபாடு இன்றி அனைவரும் சட்டமன்றத்தில், 'தமிழ்நாடு வாழ்க' என்று முழக்கம் செய்தபோது, என் 58 ஆண்டுக் காலத்திலும் கேட்டறியாத கீதத்தை—செவியில் பாயாத செந்தேனை—பார்த்தறியாத காட்சியை நான் உணர்ந்தேன்!

இரண்டாவதாக—சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லபடியாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தபோது மகிழ்ந்தேன்!

மூன்றாவதாக—'இனி தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி இல்லை' என்று அறிவித்தபோது மகிழ்ந்தேன்!"

**இவை அனைத்துக்கும் மேலாக, 'காங்கிரசுக் கட்சியால் மட்டுமே நாடாள முடியும்; மற்ற கட்சிகளால் நாடாள முடியாது' எனப் பரவலாக இருந்துவந்த—முழு அளவில் தவறான நினைப்பையும் நம்பிக்கையையும், அறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற இன்றையக் கழக ஆட்சி, கடந்த ஓராண்டுக் காலத்தில் சுக்குநூறாகச் சிதறடித்துவிட்டிருக்கிறது; இது, கழக ஆட்சி புரிந்திருக்கினற சாதனைகள் அனைத்திலும் மிகப் பெரும் சாதனையாகும்.**

கழக ஆட்சி புரிந்திருக்கின்ற இந்த ஓராண்டுக்காலச் சாதனைகள் அனைத்துக்கும் மக்கள் தந்துவந்திருக்கின்ற அரிய ஒத்துழைப்புதான் உயிர்மூச்சு! அந்த ஒத்துழைப்பை இனியும் மக்கள் தொடர்ந்து கழக ஆட்சிக்கு அளித்துவருவர் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு உண்டு; தமிழக மக்களை நாம் வேண்டிக்கொள்ளுவதும் அதுதான்!

—கா. க.

## கடத்தல் லாரிகளும் பறிமுதலாகும்

### சட்டத்தைத் திருத்த ஆய்வு

சென்னை, மார்ச் 6—

"உணவுத் தானியங்களைக் கடத்தப் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்தும் கருத்து அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது"

என, அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் அறிவித்தார்.

## பதுக்கல்--கள்ளச்சந்தையினர் மீது நடவடிக்கை

### புதிய அரசின் சாதனை --- அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 6—

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றபின், எத்தனைப் பதுக்கல்காரர்கள்—கள்ளச்சந்தைக்காரர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டன என்ற விவரத்தை, சட்டமன்றக் கேள்விநேரத்தின்போது வெளியிட்டார் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்.

கழக உறுப்பினர் திரு. பெ. மலைச்சாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் வெளியிட்ட அந்த விவரம் வருமாறு:—

"763 பதுக்கல் வழக்குகளும் 66 கள்ளச்சந்தை வழக்குகளும் தொடரப்பட்டன.

"331 பதுக்கல்காரர்மீதும் 263 கள்ளச்சந்தைக்காரர்கள் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

"பதுக்கல் வழக்கு 61-ம் கள்ளச்சந்தை வழக்கு 52-ம் பைசல் செய்யப்பட்டுள்ளன.

29 பதுக்கல் வழக்குகளிலும், 11 கள்ளச்சந்தை வழக்குகளிலும் தண்டனைகள் வழங்கப்பட்டன.

"274 பதுக்கல் வழக்குகளும் 14 கள்ளச்சந்தை வழக்குகளும் புலனாய்வில் உள்ளன."

துணைக் கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

**"29 பதுக்கல்காரர்கள் தண்டிக்கப்பட்டதே பெரிய சாதனைதான்; ஏனெனில், பதுக்கல்—கள்ளச்சந்தைக்காரர்கள் இதை ஒரு நுண்கலையாகவே கொண்டுள்ளனர்."**

## விலையைக் குறைத்துமின்சாரம்விற்க முன்வந்துள்ளது கருநாடகம்

### இதனல் தமிழகத்தின் தேவைகள் நிறைவேறி நிலக்கரியும் மிச்சப்படும்

### சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன விளக்கம்

சென்னை, மார்ச் 6—

'கருகாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு யூனிட்டுக்கு 9-காசு வீதம் மின்சாரம் கிடைக்க முன்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது; அப்போதிருந்த சூழ்நிலையில் அந்த விலை நிர்ணயிக்கப் பட்டது.

"அப்போது, கருநாடகத்திலும் அவர்களுடைய தேவைக்குப் போக ஓரளவுதான் மின்சாரம் மிச்சப்பட்டது. நமது மாநிலத்திலும் நிலைமையைச் சமாளிப்பது கடினமாக இருந்தது; இப்போது அந்த நிலை இல்லை; கருநாடகத்தில் ஏராளமாக மின்சாரம் உற்பத்தியாகிறது; அதை அவர்கள் மற்றவர்களுக்கு விற்கவில்லை என்றால், உற்பத்தித் திட்டமே பயனற்றுவிடும்.

"நமக்கும் இப்போது நிலைமையைச் சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது; எனவேதான், கருநாடக அரசினர் கொஞ்சம் இறங்கி வந்து, விலையைக் குறைத்துக்கொள்ள முன்வந்திருக்கின்றனர்; இன்னும் சிறிது காலம் நாம் காலங் கடத்தினல் இன்னும்கூட இறங்கி வருவார்கள்; ஆனால், நாம் நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். கருநாடக மின்சாரம் கிடைத்தால் அனல் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துகிற நிலக்கரியை மிச்சப்படுத்தலாம் என்ற கருத்தில் அவர்களிடமிருந்து மின்சாரம் பெற அணுகினோம். இப்போது அவர்கள், 5,000 கிலோவாட்ஸ்வரை யூனிட் 5 காசுக்கும், அதற்குமேல் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 4½ காசு வீதமும் மின்சாரம் வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்"

இவ்வாறு, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஆலடி அருணா அவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் விளக்கினார்.

## நெய்வேலி அனல் மின்சார உற்பத்தி அதிகரிக்குமா?

### அமைச்சர் நெடுஞ்செழியன் நிலைமை விளக்கம்

சென்னை, மார்ச் 6—

"நெய்வேலியில் ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் என்ன ஆயிற்று?"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் எஸ். இராமச்சந்திரன் கேட்டதற்குத் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பின்வருமாறு பதிலளித்தார்:—

"இப்போது 600 கிலோ வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது; தேவையான அளவுக்குத்தான் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறது; தேவை அதிகரிக்குமானல் மேலும் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

"இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு அனுப்பும்போது, மின்சார இழப்பு அதிகரிக்கிறது!

"மேலும் வெளி மாநிலங்களில் குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள்; 'அந்த விலைக்குக் கொடுத்தால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும் — கட்டுப்படியாகாது' என்று கூறுகிறார்கள்; எனவே, உற்பத்திச் செலவைக் குறைத்து விலையைக் குறைக்கும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

"ஆயிரம் கிலோ வாட்ஸ் உற்பத்தித் திட்டம் தேவையானபோது நிறைவேற்றப்படும்."

## மகளிர் கூட்டுறவு பண்டகச் சாலைகள்

### மேலும் ஏற்படுத்தும் எண்ணமில்லை

சென்னை, மார்ச் 6—

"தமிழகத்தில் மகளிர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் 26 இருக்கின்றன; மேலும் புதிதாக ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை"

என்று சட்டமன்றத்தில், கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் கழக உறுப்பினர் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளித்தார்.

# இந்திப் பிரசார சின்னமாக இரயில்வே!

## தனியார் கம்பெனிக்கு ஆதரவாக மக்கள் கோரிக்கையை மறுப்பதா?

## நட்டக் கணக்கைக் காட்டி தமிழகத்துக்கு அநீதி இழைக்காதீர்!

### நாடாளுமன்றத்தில் முரசொலி மாறன் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 4—

“15 ஆண்டுகளாகக் கல்லக்குடியைச் சேர்ந்த மக்கள், தங்கள் ஊரின் இரயில் நிலையத்தின் பெயர் ‘டால்மியாபுரம்’ என்றிருப்பதை, ‘கல்லக்குடி’ என்று மாற்றிட வேண்டும் என்று கோரிவருகிறார்கள்!

“மத்திய அரசுடன் நட்புகொண்டுள்ள ஒரு தனியார் கம்பெனி இதை எதிர்க்கிறது என்பதற்காக, பெயர் மாற்றத்தை மத்திய அரசு கடுமையாக எதிர்க்கிறது. ‘இந்த மக்கள் கோரிக்கைக்குப் பக்கபலமாக ஒரு காங்கிரசல்லாத அரசு நிற்கிறது’ என்பதற்காக, சனநாயக மரபுகளை மறுப்பது நல்லதல்ல! மக்களின் பெரு விருப்பத்திற்கு எதிராக முரட்டுத்தனமான பிடிவாதம் வேண்டாம்!”

என்று, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் முரசொலி மாறன் குறிப்பிட்டார். இரயில்வே வரவு – செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் தோழர் மாறன் கலந்துகொண்டு சுமார் அரைமணி நேரம் பேசினார்; குறுக்கீடுகள் எதுவுமின்றி அவர் ஆற்றிய உரையை எதிர்க் கட்சியினர் அடிக்கடி கையொலி எழுப்பி வரவேற்றனர். அவர் பேசியதாவது :—

### பிறர் துன்பத்தில் இன்பம் காண முனையாதீர்!

இரயில்வே எஞ்சினீயரிங் நிபுணர்களின் வேலை நிரந்தரமாக்கப்பட, இந்தி ‘பிரவீன்’ பரீட்சை எழுதவேண்டும் என்று இருக்கிறது; இது, விரும்பாத மக்களின் தொண்டையில் இந்தியைத் திணிக்கும் கோழைத்தனமாகும்!

ஒரு தென்னாட்டு அமைச்சர் (பூனச்சா) இங்கு இருக்கும்போது, அவரது இலாகா, இந்தித் திணிப்புக்குக் கருவியாக இயங்கலாமா? எத்தனை எஞ்சினீயர்கள்—டாக்டர்கள்— நிபுணர்கள்—இந்திப் பரீட்சை எழுத முடியாததால் வேலை உயர்வு பெறுமல் இருக்கிறார்கள் என்ற பட்டியலை நாம் அறிந்தால், திடுக்கிட்டுப்போவோம்!

நீங்கள் பிறர் துன்பத்தில் இன்பம் காணுதவர்களாக இருந்தால், உடனடியாக இந்தக் குறைபாட்டை நீக்கவேண்டும்.

எங்கள் பகுதி எஞ்சினீயர்கள் கவலையோடு இருக்கிறார்கள்; அவர்களது கவலை நீக்கும் உறுதிமொழியை அமைச்சர் தர வேண்டும்.

அந்த உறுதிமொழி நேரு உறுதிமொழிபோல் இல்லாமல், பின்னுல் செயல் இழக்காததாக—தூய்மையானதாக இதயசுத்தியோடு தரப்படவேண்டும்.

### விஷமத்தனத்திற்கு வழிகாட்டுகிறீர்களா?

தயவுசெய்து இரயில்வேயை இந்திப் பிரச்சாரச் சின்னமாக மாற்றுதீர்கள்! எங்கள் ஊர்களை எங்களுக்கு அடையாளம் காட்ட இந்திப் பெயர்கள் தேவையில்லை! லத்தீனைப்போல்—கிரேக்க மொழியைப் போல்—இந்தியும் எங்களுக்கு அந்நிய மொழியாகும்!

இந்தி மொழிப் பெயர்ப் பலகைகள், எரிச்சலூட்டுபவையாக இருக்கின்றன! அது விஷமத்தனத்திற்கு வழிகாட்டிவிடுவதாக அமைந்து விடுகிறது! ஆகவே, இரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்திடவேண்டும்; மன்னிக்கவும்—அந்த எழுத்துக்கள் ஏற்கனவே ஆத்திரமடைந்த இளைஞர்களால் அழிக்கப்பட்டுவிட்டன!

தயவுசெய்து மீண்டும் அந்த இந்தி எழுத்துக்கள், எங்கள் நாட்டு இரயில்வே நிலையங்களில் இடம் பெறுமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!

### உரியதைச் செய்யத் தவறிவிட்டார்கள்!

இதுவரை இரயில்வேத் துறைக்கு எந்தப்பகுதி அதிக வருமானம்—முதலீடு தந்திருக்கிறது என்று பார்த்தால், எங்களுக்கு அந்தத் துறை காட்டும் மாற்றுந்தாய் மனப்பான்மை தெளிவாகத் தெரியும்!

எங்கள் தமிழகத்தைச் சார்ந்த ஓ. வி. அழகேசனும், காலஞ்சென்ற எஸ். வி. இராமசாமியும் இந்தத்துறையில்இருந்திருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் உரியதைச் செய்யத் தவறிவிட்டார்கள்!

விழுப்புரம் – சென்னைக்கு மின்சார இரயில் போட்டவுடன், ‘போதும்’ என்று இருந்துவிட்டார் அழகேசன்; அதை, பிராட்கேஜ் பாதையாக மாற்றியிருந்தால் எவ்வளவு பயன் கிட்டியிருக்கும்?

அதைப்போலவே, எஸ். வி. இராமசாமி அவர்களும், சேலம்–பெங்களூர் இரயில் பாதையை, பிராட் கேஜ்களுக்கிடையே, மீட்டர் கேஜ் ஆக இணைத்தார்!

சேலம் இரும்பாலைத் திட்டம் இருக்கும் அப்பகுதிக்கு பிராட்கேஜ் பாதை அமைத்திருந்தால், சிறப்பான பலன் கிட்டியிருக்கும்!

### இரயில் பாதைத் துறையிலுமா புறக்கணிப்பு?

மின்சார இரயில் பாதைத் துறையிலும் புறக்கணிப்பு இருக்கிறது! உதாரணமாகத் தமிழ்நாட்டிலேயே மின்சார இரயில் பாதை, சென்னை—விழுப்புரம் இரயில் பாதைதான்!

ஆனால், இந்தியா முழுவதும் 5,500 கிலோ மீட்டர் மின்சார இரயில் பாதை இருக்கிறது; இது எவ்வளவு ஓரவஞ்சனை என்பது தெளிவாகும்!

சென்னை — அரக்கோணம், சென்னை—கும்மிடிப்பூண்டி இரயில் பாதைகளை மின்சார மயமாக்குவதை நான் வற்புறுத்துகிறேன்.

இப்போது சென்னையைச் சுற்றி எண்ணூர் அனல் மின்திட்டம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்ற தொழிற்சாலைகள் அமையவிருக்கிறது; தொழில் நடவடிக்கைகளும் பெருகவிருக்கின்றன; மக்கள் வாழும் இடங்கள் மேற்கிலும் வடக்கிலும் பெருகவேண்டும்; இதற்கு இந்த மின்சார இரயில் பாதைகள் மிக முக்கியமானது; பம்பாய்-கல்யாண் இரயில் பாதைக்குத் தரப்படும் முக்கியத்துவத்திற்குக் குறையாமல் இதற்கும் தரப்படவேண்டும்; விரைவில் மின்சார இரயில் பாதை ஒதுக்க வேண்டும்.

### நியாயமற்ற கட்டண உயர்வு

இரயில் கட்டண உயர்வால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்; விலைவாசிகளும் உயருகின்றன!

குறிப்பாக எங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இப்போது நீங்கள் உயர்த்தியுள்ள இரயில் கட்டணத்தால் இலாபம் பெற முடியாது; உதாரணமாக, சென்னையிலிருந்து திருச்சி 205 கிலோ மீட்டர். எக்ஸ்பிரஸ் இரயிலில் செல்வதைவிட எக்ஸ்பிரஸ் பஸ்சில் சென்றால் ஒன்றரை ரூபாய் இலாபம்; ஆகவே, மக்கள் எதை விரும்புவார்கள்?

அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழக அமைச்சரவையிலுள்ள போக்குவரத்து அமைச்சர் கருணாநிதி, பஸ் கட்டணங்களைக் குறைத்ததன்மூலம் மக்களும் அதிகமாகப் பயணம் செய்கிறார்கள்! மக்களுக்கும் இலாபம்—பஸ் தொழிலில் ஏற்பட்டுவந்த நஷ்டமும் குறைந்துவருகிறது! அந்த அளவுக்கு வருமானம் வருகிறது!

தி மு. கழக அரசு கட்டணத்தைக் குறைக்கிறது—காங்கிரசு அரசு கட்டணத்தை அதிகரிக்கிறது!

இந்த அமைச்சகத்தை எச்சரிக்கிறேன்—இந்த இரயில் கட்டண உயர்வால் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருவாய், எங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையில் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை! கட்டண உயர்வு எந்த வகையிலும் நியாயமற்றது!

இரயில்வேத் துறை இதுவரையில் ரூ. 161-கோடி சேமித்து ‘பிக்சட் டெபாசிட்’டாக இந்திய அரசாங்கத்திடம் தந்துள்ளது; அதை ஏன் பயன்படுத்தவில்லை—கட்டணத்தை உயர்த்துவதற்குமுன்பு!

### சிந்தனை சிறிதுமற்ற செயல்!

மேட்டுப்பாளையம்—உதகை, மன்னார்குடி—நீடாமங்கலம், மாயூரம்—தரங்கம்பாடி, பேரளம்—காரைக்கால் ஆகிய இரயில் பாதைகளை எடுப்பது என்று இரயில்வேத்துறை செய்துள்ள முடிவு, எங்களுக்குப் பேரிடியாக உள்ளது! இது, சிந்தனை சிறிதுமற்ற செயலாகும்!

உதாரணமாக, தஞ்சை மாவட்டம் அரிசி விளையும் பூமி; தமிழகத்தின் தானியக் களஞ்சியமாகும்; அங்கிருந்துதான் பற்றுக்குறைப் பகுதிகளுக்குத் தானியம் செல்கிறது. அதற்கு இரயில், பெருவாரியாகப் பயன்படுகிறது—பஸ்கள் வேண்டுமளவுக்கு விடப்படுகிறது; ஆகவே இரயில் பாதைகளை எடுப்பது சரியல்ல!

‘உணவு உற்பத்தி பெருக வேண்டும்’ என்று வெளியில் பேசும் அரசாங்கம், இந்த இரயில் பாதைகளை எடுப்பது கற்பனைக்கு எட்டாததாகும்; உள்ளபடியே, தஞ்சையில்தான் இன்னும் அதிக இரயில் பாதைகளைப் போடவேண்டும்.

‘இலாபம் இல்லை’ என்று கூறி, தென்னகத்தில் இரயில் பாதைகளை அகற்றும் அரசாங்கத்தைப் பார்த்துக்கேட்கிறேன்—இலாபம் மட்டுமே குறிக்கோள் என்றால், அரசாங்கம் எடுத்து நடத்தும் பல பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமில்லாமல் பெரு நட்டத்தில் நடந்துகொண்டிருக்கின்றனவே—அவற்றையும் மூடப்போகிறீர்களா? ஆகவே, உங்கள் நோக்கத்தைச் சந்தேகிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பொருளாதார நோக்கம் இதில் இருப்பதைவிட, ‘அரசியல் நோக்கம்தான் இருக்கிறது’ எனச் சந்தேகிக்கிறோம்.

### அழுவதா? சிரிப்பதா?

#### திறமையின்மையை மூடிமறைப்பதா?

அமைச்சரை நான் அறைகூவி அழைக்கிறேன்—தென்னகத்தில் மட்டுந்தானு நட்டம் காட்டும் இரயில் பாதைகள் உள்ளன? வடக்கே உள்ள இரயில் பாதைகளின் கணக்கைக் காட்ட முடியுமா? வடக்கே இருக்கும் குறுகிய இரயில் பாதைகள் (நேரோ கேஜ்) இலாபம் தரவில்லை என்கிறீர்களா? அவற்றை எப்போது அகற்றப் போகிறீர்கள்? இந்த இரயில் பாதை கணக்கை எல்லாம் நாடாளுமன்றத்தின்முன் வைக்கத் தயாரா?

மேட்டுப்பாளையம் — உதகமண்டலம் இரயில் பாதையை அகற்றுவது அறியாமையாகும்!

1899-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ‘ரிகி’ இரயில்வே முறையையொட்டி—உலகத்திலுள்ள எஞ்சினீயரிங் திறமைகளை எல்லாம்காட்டி—அயல்நாட்டு நிறுவனம் ஒன்று, ‘நிக்கன் பேக்’ என்ற நிபுணரை வைத்து — உதகை இரயில் பாதை போடப்பட்டது!

அந்நிய நாட்டினர் இந்நாட்டிற்கு வந்து, நீலமலைகளின் நடுவேயுள்ள உதகமண்டலத்திற்கு, மலைகளைக் குடைந்து — ஆறுகளைக் கடந்து—அடவிகளின், ஆரண்யங்களின் பயங்கரத் தடைகளை மீறி—பள்ளத்தாக்குகளை, பாறைகளை, புகை நுழையாக் காடுகளைத் தாண்டி இரயில் பாதை அமைத்தனர்; யார்—எங்கிருந்தோ வந்த அந்நிய நாட்டினர்!

அந்நிய நாட்டினர் போட்ட அந்த இரயில் பாதையை சுதேசி அரசாங்கம்—சுதந்தர அரசாங்கம்—‘அகில உலக சுற்றுலா ஆண்டு’ கொண்டாடிய அரசாங்கம் எடுக்கிறது! இதை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை!

அந்நிய நாட்டினர் போட்ட அரிய இரயில் பாதையை அகற்றுவதன் மூலம், அந்த ஒப்பற்ற திறமையைக் காரி உமிழ்வதா? நமது திறமையின்மையை மூடி மறைப்பதா?

### முயற்சி என்ன செய்தீர்?

மேட்டுப்பாளையத்திற்கும்—உதகமண்டலத்திற்கும் இடையில் 32 மைல்கள்தான்; இந்தத் தூரத்தை பஸ், இரண்டரை மணி நேரத்தில் கடக்கிறது; இரயில் 4 மணி நேரத்தில் கடக்கிறது! இதுவரையில், இரயில் பயண நேரத்தைக் குறைக்க ஏதாவது முயற்சி செய்யப்பட்டதா? டீசல் எஞ்சின்களைப் போட்டால் செலவு குறையுமே—அந்த முயற்சியை எடுத்தீர்களா?

பஸ் கட்டணத்தைவிட இரயிலில் முதல் வகுப்புக் கட்டணம் மூன்று மடங்கு அதிகம்; இப்படிக் கட்டணம் விதிக்கும் முறை, பழைய கால முறை! அதிகமான மைல் தூரத்தைக் கணக்கில் எடுத்துக் கட்டணம் விதிக்கப்படுகிற முறையை மாற்ற வேண்டும்!

இத்தனைக்கும் அந்த உதகை இரயிலில், கக்கூசு வசதியும் இல்லை—முகம் கழுவும் இடமும் இல்லை!

### உங்கள் நோக்கத்திற்குக் காரணம்தான் என்ன?

உதகமண்டலப் பகுதியில் அரவங்காட்டில் வெடி மருந்துத் தொழிற்சாலையும், உதகையில் பிலிம் தொழிற்சாலையும், வன ஆராய்ச்சி நிலையமும் இருக்கின்றன. இரயில் பாதையை எடுத்துவிட்டால், அவற்றின் தேவைப் பொருட்களையும், உற்பத்திப் பொருட்களையும் எப்படிக் கொண்டு செல்வது?

இப்போது இரயில் பாதையைத் தூக்கும் நீங்கள், நாளை அந்தத் தொழிற்சாலைகளையும் அங்கிருந்து தூக்கிவிடுவீர்கள்; ‘ஏன்’ என்று கேட்டால், ‘இரயில் பாதைகள் இல்லாத இடத்தில் எப்படித் தொழிற்சாலை வைத்திருப்பது?’ என்று கேட்பீர்கள்!

---

## சொல்லுபவர் மத்திய நிதியமைச்சர்!

புதுடில்லி, மார்ச் 5—

“கடந்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் இந்தியா முழுவதிலும் ரூ. 541.71 கோடி வருமான வரி பாக்கி இன்னும் வசூலாகாமல் இருந்திருக்கிறது; 15 நிறுவனங்களும், தனியார் சிலரும் தலா ரூ. 1 கோடிக்கும் அதிகமாக வருமான வரி பாக்கி வைத்துள்ளனர்”

என்று, மத்திய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

நிதியமைச்சர் தெரிவித்துள்ள தகவல்களின்படி, திரைப்பட நடிகர்கள் மட்டுமன்றி, தொழிலதிபர்கள் பலரும் வருமான வரி செலுத்தாமலிருப்பது வடக்கிலிருந்துதான் என்பது தெரியவருகிறது.

வடக்கிலுள்ள தொழிலதிபர்களில் அரிதாஸ் முந்திரா செலுத்த வேண்டிய வரி பாக்கி மட்டும்

ரூ. 3,12,64,000

ஆகும்.

“1941-42-லிருந்து சேர்ந்த வரி பாக்கி இது” என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மற்றும் அதிக அளவில் வரி பாக்கி தரவேண்டிய தொழில் நிறுவனங்கள், அதிபர்கள் வருமாறு :—

| | |
|---|---|
| பர்மா-ஷெல் எண்ணெய்சுத்திகரிப்பு ஆலை | ரூ. 2,85,49,000 |
| பலராம் தோனூராம் | ரூ. 1,65,62,000 |
| பிரகாஷ் பஞ்சாலை | ரூ. 1,61,61,000 |
| கிரோடிமால் லோக ரிவாலா | ரூ. 1,51,34,000 |
| குவாலியர் ரயான் பட்டு உற்பத்தி நெசவாலை | ரூ. 1,48,59,000 |
| கே. ஜி. சேகசாரி | ரூ. 1,25,39,000 |
| ஆதம்ஜி ஹாஜி பீர் முகம்மது இசாக் | ரூ. 1,19,51,000 |
| ராம்நாத் பஜோரியா | ரூ. 1,17,68,000 |
| பிலிம்ஸ்தான் ஸ்டுடியோ | ரூ. 1,16,97,000 |

வடநாட்டைச் சேர்ந்த திரைப்பட நடிகர்கள் பலர் சுமார் ரூ 14 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சம் வரையிலும் வருமான வரி செலுத்தாமல் இருக்கின்ற தகவலையும் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

---

## நிராகரிப்பு!

புதுடில்லி, மார்ச் 5—

“மத்திய அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைக்க மூன்றுவது ஊதியக் குழுவை நியமிக்க வேண்டும்” என்று மக்களவையில், உறுப்பினர்கள் சிலர் கோரியதை, துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் நிராகரித்தார்; ‘இப்போதைக்கோ இன்னும் சிறிது காலத்துக்கோ மூன்றுவது ஊதியக் குழுவை நியமிக்கும் உத்தேசமில்லை’ என்று அவர் குறிப்பிட்டார்.

---

இந்த இரகசிய நோக்கம்தான், இரயில் பாதைகளை எடுப்பதற்குக் காரணமா?

### தீங்கு செய்வதாகாதா?

கேரளம், மைசூர், தமிழகம், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும், உதகை ஓர் ஆரோக்கிய நிலையமாக இருக்கிறது; உதகை இரயில் பாதையை எடுப்பதன் மூலம் நான்கு தென்னிந்திய மாநிலங்களுக்கும் தீங்கு செய்யப் போகிறீர்களா?

### விசாரணைக் குழு தேவை

இரயில் கட்டணத்தை ஏற்றுவதற்குமுன் ஒரு விசாரணைக் குழு அமைத்து, ‘கட்டணம் ஏற்றப்பட வேண்டியதுதானு? கட்டணம் ஏற்றுமல் இயங்க முடியாதா?’ என்பதை விசாரிக்க வேண்டும்; அந்த விசாரணை முடியும்வரை கட்டணங்களை ஏற்றக் கூடாது!”

சட்டமன்றத்தில்:

# நோய் நாடி--நோய் முதல் நாடி!

[எஸ். ஆர்.]

பட்டமளிப்பு விழாவினைக் கவனித்தவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்—மற்ற பட்டங்களுக்கும் மருத்துவப் பட்டங்களுக்கும் உள்ள உறுதிமொழிகளில் வேறுபாடு இருப்பதனை! ஏனெனில், மருத்துவம் படித்தவர்கள் இறங்கப்போகும் தொழில் துறை அத்தகையது! வேண்டுதல் — வேண்டாமை; உற்ருர்—உறவு; ஆண்—பெண் ஆகிய அத்துணை வேறுபாடுகளையும் கடந்த நிலையில், மனிதத்தன்மையை மட்டும் மனத்தில் பதித்துப் பணியாற்ற வேண்டியதுறை அது!

"அத்துறையில் கடைபிடிக்க வேண்டிய புனிதத் தன்மையை, மாநிலத்தின் நிர்வாகத்தில்—'முதலமைச்சர்' என்ற முறையில்—அண்ணு அவர்கள், கடைபிடித்து வருகிருர்கள்" என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை உணர்த்திக் காட்டுகிறது—அவரது நேற்றைய சட்டமன்ற உரை!

**"'காங்கிரசு அல்லாத ஒரு கட்சியினைச் சேர்ந்த நிதியமைச்சர்' என்ற முறையில் இல்லாமல்—'கழக நிர்வாகத்தின் முதலமைச்சர்' என்ற தகுதியிலும் நில்லாமல்—மத்திய-மாநில அரசுகளிடையே உள்ள பொதுவான அரசியல்-நிதி முறை உறவுகளை ஆக்கபூர்வமான முன்னேற்றங்களுக்கும் நிரந்தரமான ஒத்துழைப்புக்கும் உண்டான வழிவகைகளை ஆராயும் பாங்கில் வந்துள்ள நிதிநிலை அறிக்கை இதுவே முதலாவதாகும்"**

என, 1968-69-ம் ஆண்டுக்கான 'பட்ஜெட்'டினைப் பற்றி 'நம் நாடு' மதிப்பிட்டதற்கு, யாரிடமிருந்து ஒப்புதல் கிடைப்பது பொருத்தமோ—பெருமையோ, அவரிடமிருந்தே கிடைத்திருக்கிறது!

"கழகக் குரலைத்தான் பட்ஜெட் பிரதிபலிக்கிறது" என்று காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் திரும்பத்திரும்ப எழுப்பியிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணு அவர்கள்,

**"58 பக்கங்களைக்கொண்ட நிதிநிலை அறிக்கையில், நான்கைந்து பக்கங்களில் தான் மத்திய அரசைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பொதுவான அரசியல் நியதிகளைப் பற்றித்தான் நான் சொல்லியிருக்கிறேன்"**

என்று அண்ணு அவர்கள் குறிப்பிட்டிருப்பதை மனதில் இருத்திக் காங்கிரசு உறுப்பினர்கள், மீண்டும் ஒருமுறை 'பட்ஜெட்' வரிகளில் கவனத்தைச் செலுத்துவது, அவர்களுக்கே நல்ல பல அரசியல் சிந்தனைகளைத் தருவதாக இருக்கும்!

நிதி ஒதுக்கீடுகளில்—அதிகாரப் பங்கீடுகளில்—வட்டி வசூலிப்பதில் எந்தெந்த முறைகளில் மத்திய அரசை அணுகினல்—அரசியல் உறவு முறை பாழாகாத வகையில்—மாநில அரசுகள் பலன்களை அதிக அளவுக்குப் பெற முடியும் என்பதற்கான யோசனைகளை அண்ணு அவர்கள், தமது நிதி நிலை அறிக்கையில் விவரித்திருந்த 'மென்மை'யான—'நாகரிகமான' முறையினைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"மத்திய அரசின் பார்வைக்கு இதைவிட உடன்பாடான (Passitive) யோசனைகளை இவ்வவவு மென்மையாகக் காங்கிரசல்லாத வேறு எந்த முதலமைச்சரிடமிருந்து எதிர்பார்க்க முடியும்"**

என்று எழுதி 'நம் நாடு' பெருமைப்பட்டிருந்தது.

நிதி நிலை அறிக்கையின் இந்த மேம்பாட்டினை—சிறப்பினைப் புரிந்துகொள்ள மனமில்லாமல், 'மத்திய அரசின்மீது மோதல்'—'தாக்குதல்' என்ற 'கடின'மான சொற்களால் சிலர் விவரிக்கத் துணிந்திருப்பதனைக் கண்டு துணுக்குற்றிருக்கும் முதலமைச்சர், தமது தூய நெஞ்சத்தினை மேலும் ஒரு படி சென்று திறந்து காட்டியிருக்கிருர்:—

**"காங்கிரசல்லாதவர்கள் (இங்கே) ஆளுகிருர்கள் என்பதால்தான், (அங்கே இருப்பவர்கள்) பாரபட்சம் காட்டுகிருர்கள் என்று நான் இன்றும் சொல்லவில்லை—நேற்றும் சொல்லவில்லை—என்றும் சொல்லவில்லை; சொல்லப்போனல், இந்த அரசுடன் மத்திய அமைச்சர்கள் மிக்க அன்போடு நடந்து கொள்கிருர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்."**

அண்ணு அவர்களின் பதிலுரையில் காணப்படும் இந்த இதய ஒலி, நிதிநிலை அறிக்கை விவாதத்துக்காக மட்டும் தந்த விளக்கமல்ல; 'காங்கிரசு அல்லாத ஆட்சிகளைக் கவிழ்ப்பது' என்று ஐதராபாத் மாநாட்டில் அதிகாரபூர்வமாகத் தீர்மானம் போட்டவர்கள்—'விரைவில் இந்தியா முழுவதும் காங்கிரசாட்சி' என்று 'மிகக் குறைவாக'ப் பேராசையைக் காட்டிக்கொண்ட காங்கிரசின் புதிய தலைவர் நிஜலிங்கப்பா ஆகியோர் உள்ளத் தூய்மை பெறுவதற்காகத் தரப்பட்டிருக்கும் நிலை விளக்கமாக இருக்கிறது!

ஊசிக் குழாயினைக் கையில் பிடித்துக்கொண்டே, 'எல்லாம் ஆண்டவன் கையிலல்லவா இருக்கிறது? நம் கையில் என்ன இருக்கிறது?' என்ற நம்பிக்கையுடன் நோயாளியை அணுகுகையில்,

**"இப்போதைக்கு வலி நின்ருல் போதாதா? அப்புறம் என்ன வேண்டுமாம்? இன்னும் வலிக்கிறது என்ருல் மீண்டும் ஒரு தடவை வந்து போயேன்"**

என்று கூறும் டாக்டர்கள் நாட்டில் அநேகம்பேர் உண்டு!

**நோயையும் கண்டறிந்து—அதன் மூலகாரணத்தையும் ஆராய்ந்து—நிரந்தரமாக நலிவைப் போக்கும் முறைதான் சிறந்தது -- தகுந்தது! அரசியலில் இத்தகைய மருத்துவர்கள் கிடைப்பது அரிது! கிடைத்தால், பெரும் பேறுதான்!**

அமைச்சரவையின் சார்பாக அண்ணு அவர்கள் தந்திடும் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும்—தயாரித்து அளித்திடும் கவர்னர் உரைகள் ஒவ்வொன்றும் மாநில அரசியலில் உள்ள 'நோய்'களின் தன்மை கண்டு—அதன் மூலகாரணம் தெரிந்து சொல்லப்படும் நிரந்தரமான மருந்து (Permanent Solution)களாகத்தான் அமைந்திருக்கின்றன என்பதனை, கட்சி எல்லைக்கு அப்பாற்பட்டு நின்று ஆராயும் நடுநிலையாளர்கள் உணர்ந்திருக்கின்றனர்!

- ★ **இந்திய ஒற்றுமை வேண்டும் என்று மட்டும் அண்ணு சொல்லுவதில்லை; அது எந்த வகையில் கிட்டும் என்பதனையும் சொல்லுகிருர்!**
- ★ **இப்போதுள்ள கூட்டாட்சி முறை, 'குறையுடையது' என்றும் கூறவில்லை; அதனை, 'எப்படிப் போக்கலாம்' என்றும் கூறுகிருர்!**
- ★ **'அதிக அதிகாரங்கள் தேவை' என்று மட்டும் விரும்பவில்லை; அதனை 'மாச்சரியமில்லாமல், மத்திய-மாநில அரசுகள் எப்படிப் பகிர்ந்துகொள்ளலாம்' எனவும் விளக்குகிருர்.**
- ★ **'கூடுதல் நிதி வேண்டும்' என்று மட்டும் கூறி நின்றுவிடவில்லை; அதனை, 'எப்படி அடைய முடியும்' என்ற வழிவகைகளை தெளிவுபடுத்திக் கூறுகிருர்!**
- ★ **'திட்டங்களும், சோஷலிசக் கொள்கைகளும் வேண்டாம்' என்வர்கள் வரிசையில் அவர் வரவில்லை! இரண்டிலும் உள்ள குறைபாடுகளைச் சொல்லுவதிலும், அதனை நிவர்த்திப்பதற்கான மார்க்கங்களைக் காட்டுவதிலும் சிறந்து காணப்படுகிருர்!**

இத்தனையும் காணப்படும் அவரது நிதி நிலை அறிக்கை—அதன்மீதான விவாதங்களுக்குத் தந்துள்ள பதிலுரை—ஆகிய இரண்டிலும் அவர், காங்கிரசல்லாதவராகவும் தென்படவில்லை—கழக முதலமைச்சராகவும் காட்டிக்கொள்ளவில்லை; மாருக, மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கும் ஒரு நண்பராய்—நல்லாசிரியராய்—தலைசிறந்த வழிகாட்டியாய் காணப்படுவதனை, காங்கிரசுக்காரர்களின் 'அரசியல் கண்கள்' மட்டும் காண மறுக்கிறது!

- ★ **ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள குறைபாடுகள்—**
- ★ **அதனல் இந்தியப் பொருளாதாரத்தில் விழுந் ஓட்டைகள்—**

என்ற இரண்டு பிரச்சினைகள் பற்றி நேற்றையத் தினம் அவர் கொடுத்திருக்கும் தெளிவுரைக்கு மத்திய அரசினரோ அல்லது அவர்களுக்கே எசமானர்களாக உள்ள திட்டக் குழுவோ, 'சரிதான்' என்றுதான் ஒப்புதல் தரவேண்டியிருக்கிறதே தவிர, 'அப்படி இல்லை' என்று ஒரு மறுப்புரைகூடத் தரமுடியாது; ஏனெனில், ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கூறிய டாக்டர் காட்கில் சாதாரணமானவரல்லர்—திட்டக் குழுவின் இப்போதையத் துணைத் தலைவர்! அல்லது எச். எம். படேல், டாக்டர் லோகநாதன் போன்ருேரும், சுலபத்தில் ஒதுக்கி விடப்படக்கூடியவர்கள் அல்லர்!

கழக அரசின் ஓராண்டு பருவத்துக்குள், 'புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டதா? வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்ததா?' என்றும் கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்கு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மூன்ருண்டுகள் கிடப்பில் போடப்பட்டு இப்போதுதான் தலைகாட்ட இருக்கும் அவலத்தினை—அவருக்கே உரித்தான கதைகள் மூலம் அண்ணு அவர்கள், எடுத்துக்காட்டியிருப்பது—இங்கேயுள்ள 'ஆண்டவர்'களுக்கு இல்லையென்ருலும், மத்திய அரசினருக்கு வெட்கத்தை ஏற்படுத்யே தீரும்!

மத்திய அரசினரையே பாதிக்கும் வகையில் இதுபோன்ற அடிப்படை புரியாத விமர்சனங்கள், காங்கிரசுத் தரப்பிலிருந்து இனி எழாமல், மாநிலத்துக்கெனப் பொதுவான நன்மைகளைக் கேட்டுப் பெறுவதில் அவர்களது ஒத்துழைப்பு கிடைக்குமா என்பது, 'அங்கே' இருக்கும் அரசியல் பெருந்தன்மையைப் பொறுத்தது!

சினிமா 'கியூ' காட்டும் நீளம், நாட்டின் முன்னேற்றத்தைத் தெரிவிப்பதாகக் கண்டுபிடித்துக் கூறிய முன்னுள் அமைச்சரின் பொருளாதாரத் தத்துவம், கழகப் பொருளாதாரத் தத்துவத்தினின்றும் எப்படி வேறுபட்டது என்பதனை மென்மையாக இடித்துக் காட்டியிருக்கும் அண்ணு அவர்கள், 'நமது மாநிலத்தில் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், நாணய வீக்கம், தொழில்துறைத் தேக்கம் ஆகிய குறைபாடுகள் இங்கே முளைத்தவை அல்ல.

நாடு முழுவதுக்கும் திட்டம் வகுக்கும் மத்திய அரசு தூவியவிதைதான்' என்பதனை, மிக எளிமையாகப் புரியும்வகையில் எடுத்துரைப்பது, கட்டணம் செலுத்தாமல் காங்கிரசுக்காரர்கள் பெற்றிருக்கும் பொருளாதாரப் பாடமாகும்!

'இங்கே—அங்கே' என எங்கேயும் அவர்களே ஆண்டபோது, குணமாக்கப்படாமல் மூடி மறைத்து வைக்கப்பட்டுவந்த பல வியாதிகளுக்கான மூல காரணத்தினையும், அவைகளுக்கான மருந்தைப் பெறும் மார்க்கத்தினையும் காட்டியிருக்கும் அண்ணு அவர்களின் பதிலுரை, 'நோய் நாடி நோய் முதல் நாடி' என்ற திருக்குறளின் அரசியல் பதிப்பாக இருக்கும் அருமையினை, வியந்து பாராட்டாதவர்கள் இருக்கமுடியாது!

## கலைப் பாடங்களுடன் அறிவியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையாகும். முறை மாற்று ஏற்பாடு செயலுக்குக் கொண்டு வரப்பட்டால், தற்போதுள்ள கல்லூரிகளில் ஏராளமான மாணவர்களைச் சேர்ப்பதற்கும் இக்கல்லூரிகளிலுள்ள வசதிகளைப் பெருமளவிற்குப் பயன்படுத்துவதற்கும் உதவும்.

எனவே, இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களைக் கலந்துகொண்டு, 1969-ல், கல்லூரிகளில், முறை மாற்று ஏற்பாட்டைச் செயலுக்குக் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது.

### தமிழ் பயிற்று மொழி

1966—67-ல் முதன் முதலாகப் புகுமுக வகுப்புகளில் கலைப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் முறை பெருமளவிற்குக் கொண்டுவரப்பட்டது.

70 கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 4,600 மாணவர்களுக்கு மேலாக, தமிழில் பாடங்களைப் பயின்றனர்.

1967—68-ல் இத்துறையில் மேற்கொண்டும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

புகுமுக வகுப்பில் தமிழில் பாடங்களைக் கற்பிக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 83-ஆக அதிகரித்துவிட்டது.

தமிழில் பாடங்களைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 6,400-ஆக உயர்ந்துவிட்டது.

1967—68-ம் ஆண்டு முதற்கொண்டு பி.ஏ. பட்டப் படிப்புப் பாட முறைகளிலும் தமிழில் பாடங்களைக் கர்பிப்பதற்கு இம் மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் அனுமதி ல்ழங்கிவிட்டன.

1967—68-ல் ஏறத்தாழ 48 கல்லூரிகளில் பி.ஏ. பட்டப் படிப்பு வகுப்புகளில் தமிழ்ப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இப் பிரிவுகளில் ஏறத்தாழ 1,800 மாணவர்கள் தமிழில் பாடங்களைப் பயில்கின்றனர்.

1968—69-ம் கல்வியாண்டு தோடங்கி அரசாங்கக் கல்லூரிகள் அனைத்திலும் புகுமுக வகுப்புகளில் கலையியல் பாடங்களைத் தமிழில் மட்டுமே கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகுமுக வகுப்புகளில் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கவும் கருதப்பட்டுள்ளது; இதற்காக, அறிவியல் பாட நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

இத்தகைய நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்காக, தமிழ் வெளியீட்டுக் கழகம் பல்கலைக் கழக அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுத்துவருகிறது.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**8--3--68**

**சத்தியமங்கலம்**

வடக்குப்பேட்டை அண்ணு மன்றச் சார்பில் தமிழக மறுமலர்ச்சிநாள்; மாலை 7 மணிக்கு வாரச்சந்தை எதிரிலுள்ள திடலில்; தலைவர்: ச.க. நடராசன்; பேசுவோர்: ஜி.என். இராசு, எஸ்.ஜி. கண்ணப்பா, எஸ்.கே. சுப்பிரமணியம், இளங்கோவன், டாக்டர் கே. சிவக்கொழுந்து, அண்ணுதாசன், பொற்கைப் பாண்டியன், கி. மாயூரநாதன், ச.ந. கோபால்சாமி, (விளையாட்டுப் போட்டி — பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பொதுக்கூட்ட மேடையில பரிசுகள் வழங்கப்படும்.)

**அம்மூர்**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: காந்தி; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., டி.கே. பொன்னுவேலு பி.ஏ., வேலம் தம்பிதாசன், பாலகிருஷ்ணன், சி.ஏ. வரதராசன், ஏ. பரந்தாமன் பி.எஸ்சி. (அன்று இரவு நன்மாறன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்).

### குழுக் கூட்டம்

"திருச்சி நகர 21-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 9—3—68 இரவு 10 மணிக்கு மதுரை ரோடிலுள்ள சையத் மகபூப் இல்லத்தில் எம். இராமையா தலைமையில்—அ. நடராசன் முன்னிலையில் நடைபெறும்" என்று செயலாளர் அ. நடராசன் அறிவிக்கிருர்.

### கைத்தறிப் பொருட்காட்சி

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில் சென்னை—எழும்பூர் பாந்தியன்சாலையில் நடைபெறும் பொருட்காட்சியில் 8—3—68 மாலை 6 மணிக்கு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. அழகிரிசாமி தலைமையில் திரு. என்.வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் சொற்பொழிவாற்றுலார்; இரவு 7 மணிக்கு 'ஃபவரின் பாலிசி' என்ற நாடகம் நடைபெறும்.

### முகவரி மாற்றம்

M. Deiveekan M.P.,
9, Gurudwara
Rakab Kang Road,
New Delhi-1

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.